## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவக (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஜனவரி மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1987, ஜனவரி மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவக (திருத்தச்) சட்டம்

[1987, ஜனவரி மாதம் 30 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 18/83

**1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவக (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(எ) பெருந்தோட்டக் கைத்தொழில் ஆள்வலுத் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு, பெருந்தோட்ட முகாமையில் அவசியமான நாட்டம் கொண்டுள்ள ஆட்களுக்குப் பெருந்தோட்ட முகாமையில் பயிற்சி அளித்தல்;

(ஏ) பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பில் இலங்கைக்கு உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு, அல்லது வேறு நிறுவனத்திற்கு முகாமைத்துவ, தொழில்நுட்ப, மற்றும் நிருவாக ஆலோசனையும் சேவைகளும் அளித்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, அதற்கான (ஐ) என்னும் பந்தியின் இறுதியில் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஒ) உறுப்பாண்மையின் பல்வேறு தரங்களுக்கு அனுமதிப்பதற்கென அபேட்சகர்களின் தகைமையை மதிப்பிடலாம்; அத்துடன் நிறுவகத்தினது உறுப்பாண்மையின் எல்லாத் தரங்களுக்குமான தகைமையளிக்கும் பரீட்சையை நடாத்தலாம் அல்லது நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்; அத்துடன் அத்தகைய பரீட்சைக்கான கற்கைநெறிகளை ஊக்குவிக்கலாம், அவற்றுக்கு ஏற்பாடுசெய்யலாம் அல்லது அவற்றை அங்கீகரிக்கலாம்;

(ஓ) அதனது உறுப்பினர்களின் உயர்தொழில் செயற்பாடுகளிலும் பொதுவான நடத்தையிலும் உயர் தரத்தைப் பேணலை உறுதிப்படுத்தலாம்.".

2—எ 092370—2,840 (09/86)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அதற்கான (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(i) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகமொன்றை உட்புகுத்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் Iஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் I அ

சேர்த்தலுக்கான தகைமைகள், நீக்குதலுக்கான ஏற்பாடுகள், பட்டப்பெயர்களைப் பயன்படுத்தல் முதலியன

பொதுவான தகைமையீனங்கள்.

15அ. (1) ஆளெவரும்—

(அ) பதினெட்டு வயதை அடையாதிருந்தால்;

(ஆ) தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவர் என நீதித் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்;

(இ) கடனிறுக்க வகையற்றவர் ஒருவர் என அல்லது வங்கி முறிந்தவர் ஒருவர் என நீதித் தீர்ப்பளிக்கப்பட்டவராகவிருந்து, அவரது கடனிறுக்க வகையற்ற நிலை அல்லது வங்கிமுறிவு நிலை முழுக்கமுழுக்க அல்லது பகுதியளவில் தவிர்க்கமுடியாத இழப்புகளினால் அல்லது துரதிஷ்டங்களினால் எழுந்ததெனவும் பயன்படும் சான்றிதழொன்று தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் வழங்கப்படாதிருந்தால்;

(ஈ) இலங்கைக்கு உள்ளாகவாயினுஞ்சரி அல்லது வெளியேயாயினுஞ்சரி, நல்லொழுக்கப் பிறழ்வையுள்ளடக்குவதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கான மறியற் றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான ஏதேனும் தவறுக்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்,

அவர் 4 ஆம் பிரிவின்கீழ் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவுள்ள ஆளெவரும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனம் எதற்கும் அமைந்தவராக வந்தால், சபையானது அவரை நீக்குதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நீக்குதலானது, அத்தகைய ஆள் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குந் தகுந்தவரெனச் சபை திருப்தியுறின், அவரைப் பின்னர் மீளச் சேர்த்துக்கொள்வதிலிருந்து தடைசெய்வதாகாது.

உயர்தொழில் துர்நடத்தைக்காக நீக்குதல்.

15ஆ. (1) சபையானது, நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ள எவரேனும் ஆள், உயர்தொழில் துர்நடத்தைக்குக் குற்றவாளியாயிருந்தார் என்ற காரணத்துக்காக உறுப்பினர் ஒருவராகவிருப்பதற்குத் தகுதியற்றவர் எனத் திருப்திப்பட்டால், அவரை உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்தும் நீக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உறுப்பினரை நீக்குதலானது, உறுப்பினர் ஒருவரின் உயர்தொழிலைப் புரிவதற்கு அவர் தகுந்தவரெனச் சபை திருப்தியுறின், அவ்வுறுப்பினரை பின்னர் மீளச் சேர்த்துக்கொள்வதிலிருந்து சபையைத் தடைசெய்வதாகாது.

(3) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக—

(அ) இலங்கைக்கு உள்ளாகவாயினுஞ்சரி அல்லது வெளியேயாயினுச்சரி நல்லொழுக்கப் பிறழ்வையுள்ளடக்குவதும் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான ஏதேனும் தவறுக்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படல் ;

(ஆ) உயர்தொழில் வேலையைப் புரிவதில் பெரும் கவனயீனம் ;

(இ) பொய்யானதெனத் தெரிந்துகொண்டு சபைக்கு வெளிப்படுத்துகை, கூற்று அல்லது விவரத்திரட்டு ஒன்றைச் செய்தல் ;

(ஈ) நிறுவகத்தின் நற்பெயருக்கு அபகீர்த்தி உண்டு பண்ணுதல் அல்லது உண்டுபண்ண முயலுதல்,

உயர்தொழில் துர்நடத்தையாகக் கருதப்படல் வேண்டும்.

ஒழுக்காற்றுக் குழுக்களினுல் செய்யப்படும் விசாரணைகள்.

15இ. (1) ஒழுக்காற்றுக் குழுவொன்று, விசாரணை யின் பின்னர், உறுப்பினர் எவரும் உயர்தொழில் துர் நடத்தைக்குக் குற்றவாளியாவார் என சபைக்கு அறிக்கையொன்று செய்திருந்தாலொழிய, சபையானது அத்தகைய உறுப்பினரை 15ஆ என்னும் பிரிவின்கீழ் நீக்குதலாகாது.

(2) சபைக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டின் மேலாயினுஞ்சரி வேறுவகையிலாயினுஞ்சரி, நிறுவகத் தின் உறுப்பினர் எவரும் உயர்தொழில் துர்நடத் தைக்கு குற்றவாளியாவார் என நம்புவதற்குச் நியாயமான காரணமிருக்குமிடத்து, சபையானது அவ்வுறுப்பினரின் நடத்தைபற்றி விசாரணை ஒன்றை நடாத்தும் நோக்கத்திற்காக ஒழுக்காற்றுக் குழு வொன்றை நியமிக்கலாம்.

(3) இச்சட்டத்தின் அட்டவணைக்கான ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் ஒழுக்காற்றுக் குழுக் களை அமைத்தல் தொடர்பாகவும் அவற்றினுல் பின்பற் றப்படவேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பாகவும் அத்தகைய குழுக்களினுல் நடாத்தப்படும் விசாரணை களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், அத்தகைய குழுக்களினுல் பிரயோகிக்கப்படற்பாலனவான தத்து வங்கள் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண் டும்.

நீக்குதலுக்குப் பதிலாக இடைநிறுத்தல்.

15ஈ. நிறுவகத்தின் உறுப்பாண்மையிலிருந்து எவ ரேனும் உறுப்பினரை நீக்குவதற்குச் சபையானது 15ஆ என்னும் பிரிவினுல் தத்துவமளிக்கப்பட்டிருக்கும் ஏதே னும் சந்தருப்பத்தில் சபையானது, அத்தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக, அவ்வுறுப்பினரை உறுப் பாண்மையிலிருந்து சபை தகுந்ததெனக் கருதும் அத் தகையவாருன காலப்பகுதிக்கு இடைநிறுத்திவைக்க லாம்.

15ஆ அல்லது 15ஈ என்னும் பிரிவின்கீழ் சபையின் முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல்.

15உ. பதினைந்து ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 15ஈ என்னும் பிரிவின்கீழ் சபையின் முடிவொன்றினுல் இடருற்றவரான ஆளெவரும் அம்முடிபுக்கெதிராக, அத்தகைய முடிபு அவருக்குத் தெரிவிக்கப்பட்ட ஒரு மாதத்துக்குள்ளாக மேன்முறையீட்டு நீதிமன்றத் துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

இச்சட்டத்தின் கீழ் வழங்கப் பட்ட பட்டப் பெயர்களைப் பயன்படுத்தல் பற்றிய மட்டுப் பாடுகள்.

15ஊ. ஆளெவரும், பின்வரும் உறுப்பினர் ஒருவராக நிறுவகத்தினுல் சேர்க்கப்பட்டிருந்தாலொழிய பின் வரும் பட்டப்பெயர்களை எடுத்தலோ பயன்படுத்தலோ ஆகாது :—

"தேசிய பெருந்தோட்ட முகாமை நிறுவகத்தின் மாணவ உறுப்பினர்",

"தேசிய பெருந்தோட்ட முகாமை நிறுவகத்தின் கூட்டு உறுப்பினர்",

"தேசிய பெருந்தோட்ட முகாமை நிறுவகத்தின் இணை உறுப்பினர்".

தவறுகள்.

15எ. இச்சட்டத்தின் 15ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகளை அசட்டை செய்கின்ற அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"விதிகள் ஆக்குவதற்கான தத்துவம்.

(1) சட்டத்தினால் விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ள எல்லா விடயங்கள் தொடர்பாகவும் அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும் நிறுவகமானது விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினது தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பாகவும் அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும் விதிகளை ஆக்கலாம் :—

(அ) உறுப்பாண்மையின் பல்வேறு தரங்களுக்கு அனுமதிப்பதற்கான தகைமைகள் ;

(ஆ) உறுப்பாண்மையின் வெவ்வேறு தரங்களில் சேர்வதற்கும் புதுப்பித்தலுக்குமான கட்டணங்களைக் கொடுப்பனவு செய்யும் நேரமும், முறையும் புதுப்பித்தலுக்கான கட்டணங்களைச் செலுத்தத் தவறியதன்மேல் உறுப்பாண்மையை முடிவுறுத்தலும், அத்துடன் அத்தகைய சந்தர்ப்பங்களில் உறுப்பாண்மையை மீள அடைவதற்கான நிபந்தனைகளும் ;

(இ) சபையினால் ஏற்பாடுசெய்யப்படும் போதனை நெறிகளுக்கான தகுதியளிக்கும் பரீட்சைகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களால் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும் விரிவுரையாளர்களையும் பரீட்சகர்களையும் தொழிலில் ஈடுபடுத்துதலும் அவர்களின் ஊதியமும் ;

(ஈ) மாணவ உறுப்பினர்களுக்கு பணவகையாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி உதவி வழங்கல்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் நிறுவகத்தினால் ஆக்கப்படும் விதியொன்று, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.".

## அட்டவணை

### ஒழுக்காற்றுக் குழுக்களினால் செய்யப்படும் விசாரணைகள் தொடர்பான விதிகள்

1. இச்சட்டத்தின்கீழ், நடாத்தப்படவேண்டிய விசாரணை எதனதும் நோக்கங்களுக்காக, சபையானது, திருவுளச்சீட்டுமூலம் அதன் உறுப்பினர்களிலிருந்து மூன்று ஆட்களை ஒழுக்காற்றுக் குழுவொன்றை அமைப்பதற்கென நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவர்களுள் ஒருவரை குழுவின் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

2. (1) சபையானது ஒழுக்காற்றுக் குழுவினால் புலனாய்வு செய்யப்பட வேண்டிய குற்றச்சாட்டுக்களை எடுத்துக்காட்டும் கூற்றொன்றினைத் தயாரிக்கச்செய்தல் வேண்டும் என்பதுடன் சபையின் செயலாளரானவர், அக்கூற்றின் பிரதியொன்றை, குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், அத்துடன் எவ்வாளின் நடத்தை புலனாய்வின் விடயப்பொருளாக உள்ளதோ அவ்வாளுக்கும், அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) எவரேனும் ஆளின் துர்நடத்தையைச் சார்த்தும் மனுவொன்றின் அல்லது முறைப்பாடொன்றின் விளைவாக விசாரணையொன்று நடாத்தப்படவுள்ளவிடத்து, சபையின் செயலாளரானவர், விடயத்திற்கேற்றுற்போன்று, அம்மனுவினது அல்லது முறைப்பாட்டினது பிரதியொன்றையும் சேர்த்து அவ்வாளுக்கும் ஒழுக்காற்றுக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்புதல் வேண்டும்.

3. (1) சபையின் செயலாளரானவர், விசாரணைக்கென நிர்ணயிக்கப்பட்ட முதலாவது தேதி பற்றிய அறிவித்தலை, எவ்வாளின் நடத்தை, புலனாய்வின் விடயப்பொருளாக உள்ளதோ அவ்வாளுக்கு கொடுத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் விசாரணைக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பதினான்கு நாட்கள் முன்னராவது அவ்வாளுக்கு நேரில் ஒப்படைக்கப்பட வேண்டும் அல்லது அவ்வாள் கடைசியாக வதிந்ததாக அறியப்படும் இடத்துக்கு முகவரியிடப்பட்ட பதிவுக்கடிதமூலமாக அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளவரான ஆளெவரும் நேரில் அல்லது அவரது பிரதிநிதிமூலம் சமுகமளிக்கத் தவறுமிடத்து, ஒழுக்காற்றுக் குழுவினால் அவரது சமுகமின்றி விசாரணை நடாத்தப்படலாம்.

(3) விசாரணை ஒத்திவைக்கப்படக்கூடிய ஏதேனும் தேதி பற்றிய அறிவித்தல், எவ்வாளின் நடத்தை விசாரணையில் விடயப் பொருளாகவுள்ளதோ அவ்வாளுக்கு குழுவினால் நேரடியாகக் கொடுக்கப்படல் வேண்டும் அல்லது (1) ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள முறையில் கொடுக்கப்படல் வேண்டும்.

4. (1) எவரேனும் ஆளின் சான்று அல்லது எவரேனும் ஆளினால் ஏதேனும் ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் ஒழுக்காற்றுக்குழுவொன்றினால் ஏதேனும் விடயம் புலனாய்வு செய்யப்படுவதை இயலச் செய்வதற்கு அவசியமானது என சபை அபிப்பிராயப்பட்டால், சபையானது, நேரில் ஒப்படைக்கப்படவேண்டிய அல்லது அவ்வாள் கடைசியாக வதிந்ததாக அறியப்படும் இடத்திற்கு முகவரி யிடப்பட்ட பதிவுக் கடிதம் மூலம் அஞ்சலில் அனுப்பப்படவேண்டிய அறிவித்த லொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்தி லும் சமுகமளிக்கும்படி அல்லது அத்தகைய ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்படி அவ்வாளைத் தேவைப்படுத்துமாறு சபையின் செயலாளரைப் பணித்தல் வேண்டும்.

(2) சபையின் அப்போதைக்கான செயலாளர் ஒவ்வொரு ஒழுக்காற்றுக் குழு வினதும் செயலாளராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இவ்விதிகளின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒவ்வொன்றும் அவரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) ஒழுக்காற்றுக் குழுவொன்றின் முன்னிலையில் சாட்சியம் அளிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ள எல்லா ஆட்களைக்கொண்டும் சத்தியஞ் செய்விப்ப தற்கு அல்லது உறுதியுரை எடுத்தோதுவிப்பதற்கு அக்குழு தத்துவமுடையதா தல் வேண்டும்.

(4) எவ்வாளின் நடத்தை விசாரணையொன்றின் புலனாய்வுக்கான விடயப் பொருளாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் அல்லது அத்தகைய விசாரணை யில் ஏதேனும் முறையில் சம்பந்தப்பட்டுள்ள ஆளெவரும், அத்தகைய விசார ணையில் சட்டத்தரணியொருவரினால் பிரதிநிதித்துவஞ் செய்யப்படலாம்.

(5) சாட்சியம் அளித்தல் பற்றியும் சான்று எடுத்தல்பற்றியும் ஒழுக்காற்றுக் குழுவிற்கு உதவியளிக்குமாறு எவரேனும் சட்டத்தரணிக்கு சபை அதிகார மளிக்கலாம்.

(6) ஒழுக்காற்றுக் குழுவினால் நடாத்தப்படும் விசாரணை ஒவ்வொன்றும், ஏதேனும் விடயத்தில் சபை வேறு விதமாகத் தீர்மானித்தாலொழிய மறை வில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(7) ஒழுக்காற்றுக் குழுவின் முன்னரான பிரச்சினை எதுவும் அக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினரின் முடிவுமூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(8) விசாரணையொன்று முடிவுற்றதன்மேல், ஒழுக்காற்றுக் குழுவானது, அவ் விசாரணை எவ்விடயங்கள் தொடர்பாக நடாத்தப்பட்டதோ, அவ்விடயங்கள் மீதான முடிவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை தயாரித்து சபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.